**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம்,**

**ஈரோடு.**

**CC.No. 172/2017**

**Date.28.07.2026**

பெயர்: சுரேஷ்குமார்

த/பெ.ராமசாமி

வழக்கு சாட்சி. அ.சா.9

(மனுவின் பேரில் சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது)

**குறுக்கு விசாரணை**

1. மறு விசாரணைக்காக மாவட்ட ஆட்சியர் எந்த தேதியில் உத்தரவிட்டார் என்றால் 19.09.2009 ஆகும். அந்த வழக்கில் எதிரியாக இருந்த கிஷோர் குமார் என்பவர் எதிரி செல்வராஜ் என்பவரின் மைத்துனர் என்பதை விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எதிரி நேரு விவேகானந்தன் என்பவரின் நிலத்தை கிஷோர் குமார் கிரையம் செய்து கொண்டார் என்பதை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அந்த வழக்கில் எதிரி ரவி என்பவர் எதிரி செல்வராஜ் என்பவரின் உறவினர் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரியவில்லை. நான் அந்த வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்தபோது வீடியோ பதிவு செய்தேனா என்றால் இல்லை.

2. நான் விசாரணை மேற்கொண்ட மேற்படி வழக்கில் சாட்சிகளை கூறி கு.வி.மு.ச பிரிவு 164 இன் கீழ் விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளபடி எந்த சாட்சிகளையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் புகார்தாரரான நேரு விவேகானந்தனை நான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.07.28 17:02:19 +0530

3. நேரு விவேகானந்தன் கொடுத்த புகார் உண்மையானது என்றும் சம்பவம் உண்மை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு முன்னர் விசாரணை செய்த புலன் விசாரணை அதிகாரியை காப்பாற்ற வேண்டியும் எனக்கு கொடுத்த நெருக்கடியின் காரணமாக உண்மையை மறைத்து மேற்படி வழக்கை RCS செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நேரு விவேகானந்தன் மீது பிடி கட்டளை இருந்ததாகவும் அதை நிறைவேற்றாமல் இருக்க வேண்டியும் அவர் கொடுத்த புகாரானது பணம் இடம் சம்பந்தமான பிரச்சனை என்றும், பால்ராஜ் என்பவரிடம் யோசனை கேட்டு பொய் புகார் கொடுத்ததாக தற்சமயம் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. மேற்படி வழக்கில் நேரு விவேகானந்தன் அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. நான் மேற்படி வழக்கை சரிவர மறு விசாரணை செய்யாமல் RCS தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. எதிரி நேரு விவேகானந்தனை பழிவாங்க வேண்டி செல்வராஜ் கொடுத்த பொய் புகாரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.07.28 17:02:25 +0530

Judicial Magistrate No.III,

Erode.